# விழுப்புரம் நகராட்சி

2021–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **31–ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில்** நடைபெற்ற **"சாதாரண கூட்ட"** நடவடிக்கைகள்.

**முன்னிலை:–** **போ.வி.சுரேந்திர ஷா,** எம்.ஏ.,
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**

## மன்றப்பொருள்

**1.** இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோரது ஜூலை 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

பதிவு செய்யலாம். ( / /சி1)

**2.** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டவாறு பொலிரோ ஜீப் வாகனங்களுக்கு 31.08.2021–ல் காப்பீடு முடிவடைவதால் காப்பீட்டு தொகை ரூ.32,291/–ஐ செலுத்த தி நியூ இந்தியா அஷ்யுரன்ஸ் கம்பெனி லிட்., நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே, தொகை செலுத்திட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம். விவரம் வருமாறு.

| வ. எண் | வாகனத்தின் பெயர் | காப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | TN 32 AB 3276 | ரூ.11,078/– |
| 2 | TN 32 AJ 7846 | ரூ.11,843/– |
| 3 | TN 32 D 3817 | ரூ.9,370/– |
| கூடுதல் | | ரூ.32,291/– |

**அலுவலக குறிப்பு:–**

மேற்கண்ட 3 வாகனங்களுக்கும் ரூ.32,291/–ஐ தி நியூ இந்தியா அஷ்யுரன்ஸ் கம்பெனி லிட்., நிறுவனத்திற்கு காப்பீட்டுத் தொகையை செலுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம். (6427/2019/இ1)

**3.** இந்நகராட்சியின் 2019–2020 மற்றும் 2020–2021–ஆம் ஆண்டுகளுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (5409/2011/சி1)

**4.** விழுப்புரம் நகராட்சியின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தேவையான Digital Signature Certificate ஆணையாளர் மற்றும் உதவி பொறியாளருக்கு புதியதாக வாங்கிட வேண்டியுள்ளது. எனவே, தனியார் ஏஜென்ஸிஸ் மூலம் பெற்று வழங்கிட உத்தேச விலைவிகிதம் ரூ.7,000/- (Rs.3500 x 2 Persons) என கணக்கிடப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு Digital Signature Certificate தேவைப்பாடு மிகவும் முக்கியம் என்பதால் "SADVI DIGITAL SOLUTIONS" நிறுவனத்தின் மூலம் Digital Signature Certificate வாங்கிட ரூ.7,000/-த்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடலாம். (4281/2021/இ1)

**5.** விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பாணாம்பட்டு கிராமம், சர்வே எண் 29/4பி2 மற்றும் 29/5பி2-ல் 0.88 ஏக்கர் அல்லது 3550.00 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் கடித ந.க.எண். 1442/2020/விமா2, நாள்.29.03.2021-ல் மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(வி.மா) எண்.16/2021 என எண்ணிடப்பட்டு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு உரிமையாளரால் மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண். 1542/2021, நாள்.08.03.2021-ல் ஒப்படைக்கப்பட்டு அசல் தானப்பத்திரம் பெறப்பட்டது.

இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான சாலை வசதி, மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு வசதிக்காக பொறியியல் பிரிவு மூலம் ரூ. 560000/-க்கு (ரூ. ஐந்து இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மனைப்பிரிவு உரிமையாளரால் நகராட்சி கருவூலத்தில் ரசீது எண். 0001162, நாள்.07.06.2021-ல் அபிவிருத்தி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறப்பு நிபந்தனைகள் 4-ன்படி இடத்தின் சந்தை மதிப்பல் 3% தொகையை நில பயன் மாற்ற கட்டணமாக அரசுக்கு செலுத்த, வருவாய் வட்டாட்சியர் விழுப்புரம் அவர்களின் கடித ந.க.எண். அ1/2787/2021, நாள்.18.07.2021-ல் தெரிவிக்கப்பட்டுள்ள சந்தை மதிப்பின்படி மனுதாரரால் அரசுக் கணக்கில் ரூ.744861/- (ரூ. ஏழு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எண்ணூற்று அறுபத்து ஒன்று மட்டும்) செலுத்தப்பட்டுள்ளது. கூராய்வு கட்டணம் ரூ.2670/- மற்றும் மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.20000/- மனுதாரரால் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு சிறப்பு நிபந்தனைகள் 2–ன்படி நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஆணையாளர், விழுப்புரம் நகராட்சி பெயருக்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு வருவாய் ஆவணங்களில் சர்வே எண். 29/4பி2பி, 29/4பி2டி, 29/5பி2பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகையால் மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1.மேற்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1594/2021/F1)

**6.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு A, பிளாக் 82, நகரளவு எண்.79 மற்றும் 83–ல் சம்பந்தப்பட்ட 2.35 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட முத்துவேல் லே அவுட் மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி திரு.S.S.ராஜேந்திரன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.16011/2021 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்திட வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/– வழங்க கோரி சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.லூர்து பால் மௌரியா, அவர்கள் மின்னஞ்சல் மூலம் கடிதம் அனுப்பியுள்ளார். மேற்காணும் கட்டணத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ. மன்றம் அனுமதிக்கலாம்

ஆ. வழக்கின் அவசர அவசியம் கருதி வழக்கினை திரு.லூர்து பால் மௌரியா வழக்கறிஞர் அவர்களிடம் ஒப்படைத்மைக்கும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/– வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(5023/2021/F1)

**7.** மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களின் நேரடி அறிவுரை மற்றும் கடிதம் ந.க,எண்.DM/6005/2020, நாள்: 30.07.2021–ன் படி 100% தடுப்பூசி செலுத்த, முகாமினை ஏற்படுத்தி உரிய களப்பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்.

நகராட்சியில் தடுப்பூசி செலுத்த போதிய பணியாளர் இல்லாததால், துணை இயக்குநர், சுகாதார பணிகள், விழுப்புரம் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யப்பட்டதில் MLHP பணியாளர்கள் 25 நபர்கள் அனுப்பி வைப்பதாகவும், அவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.366/– வழங்கவும் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் 42 வார்டுகளில் 4 நபர்கள் வீதம் 170 பணியாளர்கள் (DBC பணியாளர்கள்,

ES நர்சிங் கல்லூரி மாணவர்கள், பயிற்சி சுகாதார ஆய்வர் மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள்) பணிபுரிவதால், அம்மா உணவகம் மூலம் காலை மற்றும் மதிய உணவு வழங்கவும், இதற்கு தேவையான மளிகை பொருட்களை மகாலட்சுமி பிளாசாவில் வாங்கவும் ஆணையரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி செலுத்திய MLHP பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க ரூ.96768/- க்கு பட்டியல் சமர்ப்பித்துள்ளனர். மேலும் மளிகை பொருட்கள் வழங்கிய மகாலட்சுமி பிளாசா பட்டியல் தொகை ரூ.53709/- கோரியுள்ளனர். எனவே மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

( /20 /H1)

**8.** விழுப்புரம் நகராட்சியில் உள்ள நுண்ணுயிர் உரமாக்கும் மையங்களில் அதிகளவில் எரியும் தன்மையுடைய மக்காத மற்றும் விலை போகாத பிளாஸ்டிக் கழிவுகள் தேங்கியுள்ளதால், அவற்றினை டால்மியா சிமெண்ட் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். நகராட்சியில் உள்ள 1 காம்பேக்டர் மூலம் மட்டுமே தற்போது அனுப்பப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர் ஆய்வின் போது MCC-ல் உள்ள மேற்படி கழிவுகளை உடனே அகற்ற உத்தரவிட்டுள்ளதால், நகராட்சியில் போதிய வாகனம் இல்லாததால், தனியார் டாரஸ் வாகனம் மூலம் மேற்படி கழிவுகளை டால்மியா சிமெண்ட் நிறுவனம் அரியலூர் டால்மியாபுரம் எடுத்து செல்ல அனுமதியும், அதற்கு உத்தேச செலவினம் ரூ,10.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தொடர் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(4282/2018/H2)

**9.** இந்நகராட்சியில் உள்ள 8 நுண்ணுயிர் உரமாக்கும் மையங்களில் தேங்கியுள்ள எரியும் தன்மையுடைய மக்காத மற்றும் விலை போகாத பிளாஸ்டிக் கழிவுகள் டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற்சாலைக்கு எடுத்து சென்று ஒப்படைக்க, டாரஸ் லாரிக்கு 1 நடைக்கு ( வாடகை, டீசல், டோல் உட்பட) ஆகும் செலவினத்திற்கு மூடி முத்திரையிட்ட விலைப்புள்ளிகள் 19.08.2021 அன்று கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை 1 நடைக்கு (வாடகை,டீசல், டோல் உட்பட) |
|---|---|---|
| 1 | K.Raja Construction,<br>710,Singaravelan Street,<br>Narayana Nagar, Villupuram –605602 | ரூ.20000/–<br>(GST. 12% Extra) |
| 2 | SSV Developers,<br>354, Abitha Garden, Villupuram. | ரூ.22100/–<br>(GST. 12% Extra) |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள K.Raja Construction, 710, Singaravelan Street, Narayana Nagar, Villupuram – 605602 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(4282 /2018/H2)

**10.** விழுப்புரம் நகராட்சி ஆணையர் அவர்களின் 28.07.2021 தேதியன்று நகராட்சி அலுவலகத்தை ஆய்வு செய்து அரசு அலுவலக வளாகம் தூய்மையாகவும், தேவையற்ற பொருட்கள் மற்றும் தளவாட பொருட்களை அகற்றி அலுவலக பகுதியினை தூய்மையாக வைத்திருத்தல், வர்ணம் பூசுதல் போன்றவற்றை தலைமை செயலாளர் அவர்களின் சுற்றிக்கையினை மேற்கோள் காட்டி பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4281/2021/இ1)

**11.** விழுப்புரம் நகராட்சி புதிய பேருந்து நிலைய பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி கழிவுநீர் உந்து நிலையம் மூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் வாகன ஓட்டிகளுக்கும், பொதுமக்களுக்கும் சிரமம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேராய்வு செய்து, மழைநீர் தேங்காமல் வெளியேறிட உரிய நடவடிக்கை எடுத்திட அறிவுறுத்தியுள்ளார். தொடர்ந்து புதிய மழைநீர் வடிகால் கால்வாய் சென்னை சில்க்ஸ் Highways Drain வரையில் அமைத்திட திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு "Long Term Mitigation Fund" திட்டத்தில் செயல்படுத்திட அரசுக்கு பிரேரணை வழங்கப்பட்டுள்ளது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு விவரிக்கப்பட்டது. இருப்பினும் பயன்பாட்டில் உள்ள கழிவுநீர் உந்து

நிலையத்தில் உள்ள Screening Well–ல் வண்டல் கழிவு மண் அதிகமாக தேங்கியுள்ளதை அகற்றிட அறிவுறுத்தப்பட்டது. மேற்படி Screening Well கள ஆய்வு செய்யப்பட்டதில் 6.75 விட்டமும், 8 அடி ஆழத்திற்கும் வண்டல் மண் தேங்கியுள்ளது. எனவே, வண்டல் கழிவு மண் அகற்றிட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4281/2021/இ1)

**12.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 நரசிங்கபுரம், இளங்கோவடிகள் தெருவில் ஏற்கனவே உள்ள சிறுபாலம் (Pipe Culvert) மிகவும் குறுகலாகவும், Silt நிறைந்ததாகவும் இருப்பதால், மழைக்காலங்களில் மழைநீர் வெளியேறுவது சிரமமாக உள்ளதாலும், இதனால் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுவதால், இப்பகுதி பொதுமக்கள் புதிய RCC Culvert அமைத்து தந்திட கோரிக்கை வைத்துள்ளனர். எனவே, மேற்கண்ட பகுதியில் 2 எண்ணிக்கையிலான சிறுபாலங்கள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.55 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(4281/2021/இ1)

**13.** மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் விழுப்புரம் அவர்களால் சேவியர் காலனி பகுதியில் செயல்பட்டு வரும் நீர் உந்து நிலையத்தில் 22.08.2021 அன்று ஆய்வு மேற்கொள்ளும் போது அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் நீர் உந்து நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து மற்றும் இதர குறைபாடுகள் தெரிவித்த விவரம் வருமாறு.

1. Sewage collecting well, Iron pole and Beams should be neatly painted.
2. New Board showing the details of scheme and structure should be displayed.
3. Entire pumping station area should be neatly cleaned and paver block flooring should be laid.

மேற்கண்ட குறைகளை உடனடியாக சரி செய்து அது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டதையடுத்து, மேற்காணும் பணிகளுக்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4281/2021/இ1)

**14.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் வளாக பின்புற சாலையில் குடிநீர் பிரதான குழாய் (Pumping Main) மையப்பகுதியில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. கனரக வாகன போக்குவரத்து காரணமாக Pumping Main–ல் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதால் உடனுக்குடன் உடைப்பு சரிசெய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. உடைப்புகளை சரி செய்யும் போது ஏற்படும் சாலையின் பள்ளங்கள் தோண்டப்பட்டு மணல்களால் மூடப்பட்டு விடப்பட்டுள்ளதால், போக்குவரத்தின் காரணமாக மேடு பள்ளங்களாக உள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமம் அடைகின்றனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 27.08.2021 தேதிய ஆய்வில் சாலையில் உள்ள பள்ளங்களை Cement Concrete Batch அமைத்து சரி செய்ய தெரிவித்துள்ளதை தொடர்ந்தும், பொதுமக்களின் கோரிக்கையின்படியும், மேற்கண்ட பகுதியில் Cement Concrete Batch Work அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4281/2021/இ1)

**15.** விழுப்புரம் நகராட்சியுடன் 2011–ல் 5 ஊராட்சிகள் இணைக்கப்பட்டு இந்நகராட்சியின் பரப்பளவானது 8.33 சதுர கி.மீ பரப்பளவிலிருந்து 33.13 சதுர கி.மீ பரப்பளவாக அதிகரித்துள்ளது. இதனால் 42 வார்டுகளுக்கு தேவையான சிவில் மற்றும் குடிநீர் பணிகளுக்கான மதிப்பீடு தயாரிப்பதற்கும், பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு திட்டப் பணிகள் மற்றும் குடிநீர் வீட்டு இணைப்பு திட்டப் பணிகள் நடைபெற்று வருவதாலும், இதனை கண்காணிப்பதற்கு பொறியியல் பிரிவில் போதிய பணியாட்கள் இல்லாததாலும் நகராட்சியின் மூலம் மேற்படி பணிகளை மேற்கொள்ள மூன்று தொழில்நுட்ப உதவியாளர்கள் நிலை–II ஏற்கனவே ஒப்பந்தம் மூலம் பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில் தற்பொழுது பொறியியல் பிரிவில் SRP, TURIP நூற்றாண்டு விழா, பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு வழங்கும் பணி, குடிநீர் வீட்டு இணைப்பு வழங்கும் பணி, புதியதாக கேட்கப்படும் திட்ட பணிகளுக்கு திட்ட அறிக்கை தயாரித்தல், பொது நிதியின் கீழ் செய்யப்படும் பணிகளுக்கு திட்ட மதிப்பீடு தயாரித்தல், ஏற்கனவே முடிக்கப்பட்ட பணிகளுக்கு முடிவுறு அறிக்கை தயாரித்தல், மேலும் 33.13 சதுர கிலோ மீட்டர் சுற்றளவு உள்ள நகராட்சி பகுதிகளில் சாலைகளை ஆய்வு செய்தல் ஆகிய பணிகளை செய்வதற்கு மூன்று தொழில்நுட்ப உதவியாளர்கள் நிலை–II மற்றும் மூன்று தட்டச்சர்கள் தேவைப்படுகிறார்கள்.

இந்நகராட்சியானது மாவட்ட தலைநகரமாக இருப்பதால், மேற்கண்ட அனைத்து பணிகளும் அவசர அத்தியாவசிய பணியாவதால் எவ்வித பாதிப்பும் அடையா வண்ணம் அலுவலக பணி செய்வதற்கு மூன்று தொழில்நுட்ப உதவியாளர்கள் நிலை–II மற்றும் மூன்று தட்டச்சர்கள் போன்ற பணியாளர்களை பொறியியல் பிரிவில் 7 மாதங்களுக்கு தனியார் ஒப்பந்ததாரரின் மூலமாக (Sep 2021 to March 2022) பணியில் அமர்த்தி பொதுப்பணித்துறையின் விலைமதிப்பீட்டு பட்டியல் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விலைமதிப்பீட்டு பட்டியலில் குறிப்பிட்டுள்ள ஊதியத்தினை வழங்குவதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.60 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5332/2021/இ2)

**16.** விழுப்புரம் நகராட்சியின் அலுவலக பணி செய்வதற்கு தனியார் மேன்பவர் மூலம் பொறியியல் பிரிவுக்கு மூன்று தொழில்நுட்ப உதவியாளர் நிலை–II, மூன்று தட்டச்சர்கள் சப்ளை செய்யும் பணியின் அவசர அவசியம் கருதி ரூ.9.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 18.08.2021–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.9,50,040/– | –0.07 % குறைவு |
| 2 | திரு.P.கணேசன், ஒப்பந்ததாரர். | ரூ.9,51,930/– | 0.13 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட –0.07 % குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5332/2021/இ2)

**17.** விழுப்புரம் நகராட்சியில் சாலாமேடு ஹவுசிங் போர்டு பகுதியில் மாண்புமிகு.சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் 27.06.2021 அன்று ஆய்வு மேற்கொண்ட போது அப்பகுதி மக்கள் நகராட்சி மூலம் நல்ல குடிநீர் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்ததை தொடர்ந்து, மாண்புமிகு. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் விரைவாக இப்பகுதி மக்களுக்கு நல்ல குடிநீர் நகராட்சி மூலம் வழங்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். மேலும் சாலாமேடு இரயில்வே கேட் பகுதியில் உள்ள மீனாட்சி நகர் பகுதியில் விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாண்புமிகு. சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 22.08.2021 அன்று ஆய்வின் போது அப்பகுதி மக்கள் நகராட்சி மூலம் நல்ல குடிநீர் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்ததை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நகர் பகுதியில் அமைந்துள்ள 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் தண்ணீர் ஏற்றி அப்பகுதி முழுவதும் நல்ல குடிநீர் வழங்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

எனவே, திருப்பாச்சனூர் மலட்டாறு ஆற்றுப்படுகையில் புதியதாக 2 எண்ணிக்கையில் 8"–12" ஆழ்துளை கிணறு அமைத்து இரண்டையும் ஒன்றாக பைப்லைன் மூலம் இணைத்து சாலாமேடு மஞ்சு நகர் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக் தொட்டியில் தண்ணீர் ஏற்றுதல் மற்றும் சாலாமேடு ஹவுசிங் போர்டு 2 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் தண்ணீர் ஏற்றி விநியோகம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு அனுமதியும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5898/2021/இ2)

**18.** விழுப்புரம் நகராட்சியின் வார்டு எண். 1 முதல் 42 வரையிலான பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்வதற்கு தேவையான உதிரி பாகங்களை சப்ளை செய்யும் பணியின் அவசர அவசியம் கருதி ரூ.4.97 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 19.08.2021–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.S.சிவகாமி, ஒப்பந்ததாரர். | ரூ.4,64,503/– | –0.42 % குறைவு |
| 2 | திருமதி.S.கிரிஜா, ஒப்பந்ததாரர். | ரூ.4,73,749/– | 1.57 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.S.சிவகாமி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட –0.42 % குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4836/2021/இ2)

**19.** விழுப்புரம் நகராட்சியின் வார்டு எண். 1 முதல் 42 வரையிலான பகுதிகளில் உள்ள ஆழ்துளை குழாய் கிணற்றின் (3HP மற்றும் 20HP) மின்மோட்டார் மற்றும் Panel Board–களை பழுது நீக்கம் செய்யும் பணியின் அவசர அவசியம் கருதி ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 19.08.2021–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர். | ரூ.4,80,029/– | –0.08 % குறைவு |
| 2 | திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.4,87,795/– | 1.53 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட –0.08 % குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4835/2021/இ2)

**20.** விழுப்புரம் நகராட்சியின் வார்டு எண். 01 வழுதரெட்டி பாளையம் பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய பவர் பம்பு அமைக்கும் பணியின் அவசர அவசியம் கருதி ரூ.3.10 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 19.08.2021–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.பிரமிளா, ஒப்பந்ததாரர். | ரூ.3,00,158/- | -0.03 % குறைவு |
| 2 | திரு.M.ஆறுமுகம், ஒப்பந்ததாரர். | ரூ.3,03,370/- | 1.04 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.R.பிரமிளா, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட -0.03 % குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4858/2021/இ2)

**21.** விழுப்புரம் நகராட்சியின் வார்டு எண். 1 முதல் 42 பகுதிகளில் உள்ள ஆழ்துளை குழாய் கிணற்றின் (1HP மற்றும் 2HP) மின்மோட்டார் மற்றும் Panel Board-களை பழுது நீக்கம் செய்யும் பணியின் அவசர அவசியம் கருதி ரூ.4.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 19.08.2021-ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.4,60,837/- | -0.04 % குறைவு |
| 2 | திரு.K.தஷ்ணாமூர்த்தி, ஒப்பந்ததாரர். | ரூ.4,66,361/- | 1.15 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட -0.04 % குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4837/2021/இ2)

**22.** விழுப்புரம் நகராட்சியில் 2020-21-ம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெற்று வருகிறது. தற்போது குடிநீர் சம்மந்தமான நடப்பு மற்றும் நிலுவை கேட்பு பதிவேடு (Demand Register) தணிக்கைக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இவற்றில் நடப்பு கேட்பு பதிவேடு பக்கங்களின் எண்ணிக்கை - 1983 மற்றும் நிலுவை கேட்பு பதிவேடு பக்கங்களின் எண்ணிக்கை - 2279 ஆக மொத்தம் 4262 பக்கங்கள் Print எடுக்க வேண்டியுள்ளதால், இந்நகராட்சியில் 4262 பக்கங்கள் Print எடுக்க கூடிய அளவிற்கு போதுமான Printer இல்லாததால், தணிக்கையின் அவசர அவசியம் கருதி அரசாணை எண்.330, தொழில்துறை

நாள்.03.05.1991–ன்படி விலைப்புள்ளி கோராமல் நேரடியாக வேலை உத்தரவு வழங்க வழிவகை உள்ளதால், தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திற்கு நடப்பு மற்றும் நிலுவை கேட்பு பதிவேடு (Demand Register) 4262 பக்கங்கள் Print எடுத்து தரும் பணிக்கு வேலை உத்தரவு வழங்க அனுமதியும், மேற்காணும் பணிக்கு தோராய செலவினமாக ரூ.20000/–ஐ நகராட்சியின் குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தணிக்கையின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6084/2021/இ2)

**23.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 42 வரையிலான பகுதிகளில் புதியதாக தெருவிளக்குகள் அமைப்பதற்கு மின் இணைப்பு தேவைப்படுகிறது. மேலும் மின் இணைப்பு பெறுவதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விண்ணப்ப கட்டணம், பதிவு கட்டணம், வைப்பு தொகை, வளர்ச்சி கட்டணம், ஆய்வு கட்டணம், மதிப்பீட்டு கட்டணம், Meter Caution Deposit தொகை மற்றும் தெருவிளக்கு புதிய மின் இணைப்பு பெறுவதற்கான இதர கட்டணங்கள் செலுத்த வேண்டியுள்ளதால், இதற்கான தோராய மதிப்பீடு ரூ.20.00 இலட்சம் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சியின் தேவைக்கேற்ப மேற்கண்ட தொகையிலிருந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு 2021–22 ஆம் ஆண்டிற்கு தொகை செலுத்திடவும், மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தொகை செலுத்திட மன்றம் அங்கீகரிக்கலாம். (7272/2020/இ2)

**24.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.K.Dis.No.31117/P3/2015, நாள்.07.11.2015–இல் இந்நகராட்சிக்கு 158 தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் 3 வருடத்திற்கு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு கிரீன் வாரியர், திருவள்ளூர் என்ற நிறுவனத்திற்கு, பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.09.2016 முதல் தூய்மை பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 31.08.2019ல் முடிவடைவதால், பொதுசுகாதார நலன் கருதி மேற்படி ஒப்பந்த காலத்தினை மேலும் 6 மாத காலத்திற்கு (01.09.2019 முதல் 29.02.2020 வரை) நீட்டிப்பு செய்து தனி அலுவலரின் தீர்மான எண்.1818. நாள்.20.09.2019ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி அனுமதிக்கப்பட்ட 158 தூய்மை பணியாளர்களை மேலும் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நீட்டிப்பு செய்ய அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் வழியாக கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெறுவதற்கு காலதாமதமாவதால், பொது சுகாதாரப்பணிகள் பாதிப்பு ஏற்படாமல் இருக்க, மேலும் 3 மாதம் 01.03.2020 முதல் 31.05.2020 வரையும் (நகர மன்ற தனி அலுவலரின் தீர்மான எண்.2019 நாள்.27.02.2020) தொடர்ந்து மேலும் 3 மாதம் 01.06.2020 முதல் 31.08.2020 வரையும் (நகர மன்ற தனி அலுவலரின் தீர்மான எண்.2103, நாள்.29.05.2020) தொடர்ந்து 01.09.2020 முதல் 30.11.2020 வரையும் (நகர மன்ற தனி அலுவலரின் தீர்மான எண்.2207, நாள்.31.08.2020) தொடர்ந்து 01.12.2020 முதல் 28.02.2021 வரையும் (நகர மன்ற தனி அலுவலரின் தீர்மான எண்.2346, நாள்.30.11.2020 ) தொடர்ந்து 01.03.2021 முதல் 31.05.2021 வரை (நகர மன்ற தனி அலுவலரின் தீர்மான எண்.2509, நாள்.25.02.2021) மற்றும் 01.06.2021 முதல் 31.08.2021 வரை (நகர மன்ற தனி அலுவலரின் தீர்மான எண்.2642, நாள்.31.05.2021) அனுமதி பெறப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7938/2020/ஜே3, நாள்.05.02.2021–ல் சில விவரங்களுடன், அதாவது விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் 2020–2021–ஆம் விலை விவர அட்டவணை விலை விகிதத்தில், ஒப்பந்த பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டால் ஏற்படும் செலவினம் மற்றும் நிரந்தர பணியாளர்களுக்கான செலவினம் ஒப்பீட்டு பட்டியல் போன்ற விவரங்களுடன் முழு கருத்துருவாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. எனவே, நகர் மன்ற தீர்மானம் 2449, நாள்.29.01.2021 ல் திருத்திய செலவினத்திற்கு மன்ற அனுமதி பெறப்பட்டு, திருத்திய முழு கருத்துருவாக 08.02.2021 அன்று சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, தற்போது பரிசீலணையில் உள்ளது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பரிசீலனையில் உள்ளதால், மேலும் தற்பொழுது கொரோனா வைரஸ் தொற்று விழுப்புரம் நகராட்சியில் தொடர்ந்து உள்ளதாலும், அதனை கட்டுப்படுத்தும் பணியில் தூய்மை பணியாளர்களின் பங்கு அவசியம் என்பதாலும், மேலும், மூன்று மாதங்களுக்கு 01.09.2021 முதல் 30.11.2021 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.90.00 லட்சம் (ரூபாய் தொண்ணூறு லட்சம் மட்டும்) வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(5316/2018/எச்1)

**25.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 42 வார்டுகளில் 2021–2022–ஆம் ஆண்டில் கீழ்கண்ட விவரப்படி வரி மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவையாக உள்ளது.

| வ. எண் | இனம் | வரி விதிப்பு எண்ணிக்கை | 2021–2022–ஆம் ஆண்டு வரை நிலுவை கேட்பு |
|---|---|---|---|
| 1. | சொத்து வரி (வசூலிக்கக்கூடியது) | 36376 | 673.73 |
| 2. | காலிமனை வரி | 2299 | 40.21 |
| 3. | தொழில் வரி (நிறுவனங்கள்) | 2210 | 97.02 |
| 4. | குடிநீர் கட்டணம் | 11155 | 208.42 |
| 5. | குத்தகை | 298 | 95.14 |
| 6. | பாதாள சக்கடை | 6122 | 2379.97 |
| | | **58460** | **3494.49** |

மேற்காணும் வரி மற்றும் வரியில்லா இனங்களுக்கு உரிய கேட்பு அறிவிப்புகள் வழங்கியும் நிலுவை தொகை செலுத்த முன்வரவில்லை.

எனவே, வரிவசூல் பணியினை தீவிரப்படுத்தும் பொருட்டு நிலுவை வைத்துள்ள அனைத்து வரிவிதிப்பு தாரர்களுக்கும் கைபேசி குறுஞ்செய்தி (SMS) மூலம் கேட்பு விவரம் தெரிவிக்கும் பட்சத்தில் வசூல் பணியில் முனேற்றம் ஏற்படும் என்ற நோக்கத்தினால் இப்பணியினை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00–க்கான அனுமதியும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(5472/2021/அ1)

**26.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 42 வார்டுகளில் 2021–2022–ஆம் ஆண்டில் கீழ்கண்ட விவரப்படி வரி மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவை வைத்துள்ள அனைத்து வரிவிதிப்பு தாரர்களுக்கும் கைபேசி குறுஞ்செய்தி (SMS) மூலம் கேட்பு விவரம் அனுப்பும் பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 26–08–2021 தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளி உள்ளூர் நிறுவனத்தினடமிருந்து வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விவரம் | அகல்யா இன்போ டெக், விழுப்புரம் | ராம்ராஜ் நிறுவனம், விழுப்புரம் | ஆதவ் சொலிஷன், விழுப்புரம் |
|---|---|---|---|---|
| 1 | 1 முதல் 155 வார்த்தைகளுக்கு மிகாமல் | 1.10 | 1.26 | 1.00 |
| 2 | 156 முதல் 310 வரை உள்ள வார்த்தைகளுக்கு மிகாமல் | 2.73 | 2.99 | 2.50 |
| 3 | 311 முதல் 500 வரை உள்ள வார்த்தைகளுக்கு மிகாமல் | 4.61 | 5.31 | 4.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் ஆதவ் சொலிஷன், விழுப்புரம் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளது. எனவே, அந்நிறுவனத்தின் விலைப்புள்ளியினை வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரிவிதிப்புதாரர்களுக்கு 2021–2022–ஆம் ஆண்டு வரை நிலுவை கேட்பு குறித்து விவரம் அனுப்பும் பணி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(5472/2021/அ1)

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**விழுப்புரம் நகராட்சி**

*********